National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 27 March 2019

# ‘எஸ்யுடிடி’ பட்டதாரிகளுக்கு கூடுதல் சம்பளம், வேலைவாய்ப்புகள்

‘எஸ்யுடிடி’ பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்குச் சென்ற ஆண்டு மற்ற பல்கலைக்கழக பட்டதாரிகளைக் காட்டிலும் கூடுதல் ஆரம்பச் சம்பளமும் வேலைவாய்ப்புகளும் இருந்ததாக பட்டதாரிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று காட்டுகிறது. இரண்டாவது ஆண்டாக ‘எஸ்யுடிடி’ பட்டதாரிகளுக்கு இவ்வாறு அமைந்துள்ளது.

முழுநேர நிரந்தர வேலைகளில் உள்ள மற்ற பல்கலைக்கழக பட்டதாரிகள் சராசரியாக $3,850ஐ மாதச் சம்பளமாகச் சம்பாதிக்க, அவர்களைவிட ‘எஸ்யுடிடி’ பட்டதாரிகள் அதிக மாதச் சம்பளத்தைப் பெறுகின்றனர். அத்துடன் சென்ற ஆண்டின் பட்டதாரிகள் முந்தைய ஆண்டு பட்டதாரிகளை விட கூடுதல் சம்பளம் பெறுவதாக ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. படிப்பை முடித்து ஆறு மாதங்களுக்குள் கிட்டத்தட்ட 94% பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்ததாகவும் ஆய்வு கூறுகின்றது. இது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 91.4 விழுக் காட்டிலிருந்து ஏற்றம் கண்டது. பொறியியல், புத்தாக்கம், வடிவமைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட ‘எஸ்யுடிடி’ பல்கலைக்கழகம் 2009ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இப்பல்கலைக்கழக பட்டதாரிகள் பொதுவாக தகவல் மற்றும் தொடர்பு, நிதி, காப்புறுதி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.